Chapter XX*III Code of Criminal Procedure)*

| | | | |
|---|---|---|---|
| *IN THE COURT OF`* | | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | |
| Calendar | | SC.No.238/2024 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W.1 |
| | | Defence | |
| Name | | திரு. திருவண்ணாமலை என்ற துரை | |
| Father's Name | : | திரு.சிவன் | |
| Village | : | மேலாப்பாட்டம் | |
| Taluk | : | பாளையங்கோட்டை | |
| Calling | : | அரசுதரப்பு சாட்சி(கண் கண்ட சாட்சி) | |
| Age | : | 52 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 4th day of August 2026.

(1,2, A4 to A10, A12 எதிரிகள் ஆஜர். 3 வது எதிரி ஆஜர் இல்லை. 3 வது எதிரி தரப்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. )

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது மேலாப்பாட்டத்தில் குடியிருந்து வருகிறேன். சாட்சிகள் ஆதி, பிச்சமணி ஆகியோரை தெரியும். சாட்சி கருப்பசாமியை தெரியும். ஆஜர் எதிரிகள் அனைவரையும் தெரியும். நீதிமன்றத்திற்கு வராத எதிரி ஆசைதம்பியை தெரியும். இந்த வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. இறந்துபோன பாலமுருகனை தெரியும். இறந்துபோன சாட்சி கருப்பசாமி இறந்துபோன பாலமுருகனின் அண்ணன். பாலமுருகன் எப்படி இறந்தார் என்ற விவரம் தெரியாது. சாட்சி கருப்பசாமி எதற்காக புகார்

கொடுத்தார் என்ற விவரம் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1** ஆகும். மேற்படி கையெழுத்தை ஹைகிரவுண்டு மருத்துவமனைக்கு செல்லும்போதுஎன்னிடம் போலிசார் வாங்கினார்கள். மேற்படி புகாரில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். ஆவணங்களை பரிசீலனை செய்த பிறகு அனுமதி வழங்கப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)</u>

என்னை போலிசார் விசாரித்த போது, இறந்துபோன பாலமுருகன் மேலாப்பட்டாம் பஞ்சாயத்து துணை தலைவராக இருந்த போது எதிரிகளுக்கும், மேற்படி பாலமுருகனுக்கும், மணல் அள்ளுவது சம்மந்தமாக தகராறு இருந்து வந்தது என்றும், கடந்த 20.04.2015ம் தேதி நானும், எங்கள் ஊர் தடிவீரன் மகன் ஆத்தியும், பாளை மார்க்கெட்டிற்கு வந்திருந்தோம் என்றும், மார்க்கெட்டில் வைத்து மேற்படி பாலமுருகன் அவரது அண்ணன் கருப்பசாமியை பார்த்து பேசினோம் என்றும் அவர்கள் வேலையை முடித்திருந்தால் மேற்படி கருப்பாமியின் இருசக்கர வாகனத்தில் எங்களை வரச்செல்லிவிட்டு பாலமுருகன் TN 72 AL 9192 பல்சரில் கருப்பசாமி உடன் எங்கள் ஊருக்கு முன்னால் போகவும், நாங்கள் அவருக்கு பின்னால் சென்றுகொண்டிருந்தோம் என்றும், மதியம் 1.30 மணிக்கு சீவலப்பேரி ரோட்டில் உள்ள நைல் சிப்ஸ் கடையில் பாலமுருகன் டுவீலரை

நிறுத்திவிட்டு சிப்ஸ் வாங்கிக்கொண்டு கிளம்பும் போது 1 முதல் 6 எதிரிகள் 3 இருசக்கர வாகனங்களில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்து ஆளக்கொரு அரிவாளை எடுத்துக்கொண்டு சட்டவிரோதமாக கூடியபோது அங்கு 7 முதல் 9 எதிரிகளும் மேற்படி சட்டவிரோத கும்பலுடன் சேர்ந்து மேற்படி பாலமுருகனை 1 முதல் 6 எதிரிகளும் அரிவாளால் வெட்டி கொன்றுவிட்டார்கள் என்றும் மேற்படி சம்பவத்திற்கு 7 முதல் 9 எதிரிகள் உடந்தையாக இருந்தார் என்றும் மேற்படி சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தும் மேற்படி கருப்பசாமியுடன் சென்று புகார் கொடுத்தேன் என்றும், அந்த புகாரில் நான் அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்தேன் என்றும் பிறகு போலீஸ் விசாரணையிலும், 10 முதல் 12 எதிரிகளும் மேற்படி பாலமுகனை கொல்ல வேண்டும் என்பதற்காக சதித்திட்டத்தினை சேர்ந்து செய்தார்கள் என்று தெரிந்துகொண்டேன் என்று வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :–

நான் ஹைகிரவுண்டு மருத்துவமனையில் பாலமுருகன் இறந்த நாளன்று நான் கையெழுத்து செய்யும்போது இரவு 11.00 மணி இருக்குமா என்றால் இரவு 10.00 மணி இருக்கும்

மறுவிசாரணை இல்லை.

Chapter X*XIII Code of Criminal Procedure)*

| | | | |
|---|---|---|---|
| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | | |
| Calendar | | SC.No.238/2024 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W.2 |
| | | Defence | |
| Name | | திரு. ஆத்தி | |
| Father's Name | : | திரு.தடிவீரன் | |
| Village | : | மேலாப்பாட்டம் | |
| Taluk | : | பாளையங்கோட்டை | |
| Calling | : | அரசுதரப்பு சாட்சி(கண் கண்ட சாட்சி) | |
| Age | : | 73 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 4th day of August 2026.

(1,2, A4 to A10, A12 எதிரிகள் ஆஜர். 3 வது எதிரி ஆஜர் இல்லை. 3 வது எதிரி தரப்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. )

முதல் விசாரணை :–

நான் தற்போது மேலாப்பாட்டத்தில் குடியிருந்து வருகிறேன். சாட்சிகள் திருவண்ணாமலை என்ற துரை, பிச்சமணி ஆகியோரை தெரியும். சாட்சி கருப்பசாமியை தெரியும். ஆஜர் எதிரிகள் அனைவரையும் தெரியும். நீதிமன்றத்திற்கு வராத எதிரி ஆசைதம்பியை தெரியும். இந்த வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. இறந்துபோன பாலமுருகனை தெரியும். அந்த சமயத்தில் நான் இளையன்குடியில் உள்ள சிலண்டர் கம்பெனியில் வேலை பார்த்து வந்தேன். இது சம்மந்தமாக போலிசார்

என்னை விசாரிக்கவில்லை.

(அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். ஆவணங்களை பரிசீலனை செய்த பிறகு அனுமதி வழங்கப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)</u>

என்னை போலிசார் விசாரித்த போது, இறந்துபோன பாலமுருகன் மேலாப்பட்டாம் பஞ்சாயத்து துணை தலைவராக இருந்த போது எதிரிகளுக்கும், மேற்படி பாலமுருகனுக்கும், மணல் அள்ளுவது சம்மந்தமாக தகராறு இருந்து வந்தது என்றும், கடந்த 20.04.2015ம் தேதி நானும், எங்கள் ஊர் திருவண்ணாமலை என்ற துரையும், பாளை மார்க்கெட்டிற்கு வந்திருந்தோம் என்றும், மார்க்கெட்டில் வைத்து மேற்படி பாலமுருகன் அவரது அண்ணன் கருப்பசாமியை பார்த்து பேசினோம் என்றும் அவர்கள் வேலையை முடித்திருந்தால் மேற்படி கருப்பாமியின் இருசக்கர வாகனத்தில் எங்களை வரச்செல்லிவிட்டு பாலமுருகன் TN 72 AL 9192 பல்சரில் கருப்பசாமி உடன் எங்கள் ஊருக்கு முன்னால் போகவும், நாங்கள் அவருக்கு பின்னால் சென்றுகொண்டிருந்தோம் என்றும், மதியம் 1.30 மணிக்கு சீவலப்பேரி ரோட்டில் உள்ள நைல் சிப்ஸ் கடையில் பாலமுருகன் டுவீலரை நிறுத்திவிட்டு சிப்ஸ் வாங்கிக்கொண்டு கிளம்பும் போது 1 முதல் 6 எதிரிகள் 3 இருசக்கர வாகனங்களில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்து ஆளக்கொரு அரிவாளை எடுத்துக்கொண்டு சட்டவிரோதமாக கூடியபோது அங்கு 7 முதல் 9 எதிரிகளும் மேற்படி சட்டவிரோத கும்பலுடன் சேர்ந்து மேற்படி பாலமுருகனை 1 முதல் 6 எதிரிகளும் அரிவாளால் வெட்டி கொன்றுவிட்டார்கள் என்றும் மேற்படி சம்பவத்திற்கு 7 முதல் 9 எதிரிகள் உடந்தையாக இருந்தார்

என்றும் மேற்படி சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன் என்றும் அது சம்மந்தமாக கருப்பசாமியும், திருவண்ணாமலை என்ற துரையும் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தார்கள் என்றும் அது சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 10 முதல் 12 எதிரிகளும் மேற்படி பாலமுகனை கொல்ல வேண்டும் என்பதற்காக சதித்திட்டத்தினை சேர்ந்து செய்தார்கள் என்று தெரிந்துகொண்டேன் என்று வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :இல்லை.

மறுவிசாரணை இல்லை.

Chapter XX*III Code of Criminal Procedure)*

| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | | |
|---|---|---|---|
| Calendar | | SC.No.238/2024 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W.3 |
| | | Defence | |
| Name | | திரு. பிச்சுமணி | |
| Father's Name | : | திரு.ஆறுமுகம் | |
| Village | : | மேலாப்பாட்டம் | |
| Taluk | : | பாளையங்கோட்டை | |
| Calling | : | அரசுதரப்பு சாட்சி(மகஜர் சாட்சி) | |
| Age | : | 47 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 4th day of August 2026.

(1,2, A4 to A10, A12 எதிரிகள் ஆஜர். 3 வது எதிரி ஆஜர் இல்லை. 3 வது எதிரி தரப்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. )

முதல் விசாரணை :–

நான் தற்போது மேலாப்பாட்டத்தில் குடியிருந்து வருகிறேன். இறந்துபோன பாலமுருகன் எனது மனைவியின் பெரியப்பா மகன் ஆவார். பாலமுருகன் இறந்தது தெரியும். சாட்சி ஐய்யாசமி மகன் மாடசாமியை தெரியும். இந்த வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் 20.04.2015 ம் தேதியிட்ட 19.15 மணிக்கு தயார் செய்யப்பட்ட பார்வைமகஜரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.2** ஆகும். என்னிடம் காட்டப்படும் காட்டப்படும்

20.04.2015 ம் தேதியிட்ட 19.45 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து என்னுடைது தான். அது **அ.சா.ஆ.3** ஆகும். அதே தேதியில் அதே நேரத்தில் தயார் செய்யப்பட்டதாக சொல்லப்படும் அத்தாட்சியில் உள்ளத என்னுடைய கையெழுத்து இல்லை. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். ஆவணங்களை பரிசீலனை செய்த பிறகு அனுமதி வழங்கப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)</u>

என்னை போலிசார் விசாரித்த போது, கடந்த 20.04.2015 ம் தேதி சம்பவ இடமான சீவலப்பேரி ரோடு, நைஸ் சிப்ஸ் கடைக்கு முன்பாக பாளையங்கோட்டை காவல் நிலைய ஆய்வாளர் 19.15 மணிக்கு வந்து சம்பவ இடத்தையும், அதன் சற்றுப்புறங்களையும், மாடசாமி மற்றும் என்னை சாட்சியாக வைத்து பார்வைட்டு ஒரு பார்வைமகஜர் மற தயார் செய்தார் என்றம், மேற்படி சம்பவ இடத்தில் ரத்தம்பட்ட மண் மற்றும் ரத்தம்படாத மண் ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும், பார்வைமகஜர் மற்றும் அத்தாடசியில் நானும், மாடசாமியும் கையெழுத்து செய்தோம் என்றும், சம்பவ இடத்தில் இருந்து பாலமுருகன் ஓட்டி வந்த TN 72 AL 9192 pulsao இருசக்கர வாகனத்தை அத்தாட்சி மூலம் கைப்பற்றனார் என்று போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு எதிரிகள் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள் என்பதால் தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u> :இல்லை.

மறுவிசாரணை இல்லை.